**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண். 9/2018**

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01ம் நாள் புதன் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 திரு.S.குமார் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **முகமது மொய்தீன்** | **தொழில் :** | விவசாயம் |
| **தந்தை பெயர் :** | **ஷேக் ஜலாலுதீன்** | **சமயம் :** | – |
| **ஊர் :** | அதிராம்பட்டிணம் | **வயது** | 70 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**01.04.2026**

**கூடுதல் முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் தரப்பினர் அல்ல. வாதி என் மனைவி. ஏற்கெனவே எனது தரப்பில் வா.சா.ஆ.1 முதல் 5 ஆவணங்கள் குறியீடு செய்துள்ளேன். மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் எனது தரப்பு ஆவணங்களாக மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.64/1949 வழக்கு பதிவேடு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியிடுகிறேன். 27.04.1946 தேதியிட்ட முகமது அபுல்ஹசன் மீயருக்கு ஓணாம்ராவ் எழுதிக்கொடுத்த நில வாடகை பத்துக்கட்டு பத்திரம் பதிவு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியிடுகிறேன். 23.05.1949 ல் சே.மு.சே.சேக் ஜலாலுதீன் மரைக்காயருக்கு சுப்பிரமணிய பிள்ளை எழுதிக்கொடுத்த கிரைய சாசனம் பதிவு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியிடுகிறேன்.31.10.2014 ல் பட்டுக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.214/2014 வழக்குரை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியிடுகிறேன். 31.01.2023 ல் பட்டுக்கோட்டை மாவட்ட

உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.214/2014 தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியிடுகிறேன். 14.11.2016 ல் ல் பட்டுக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.214/2014 ஆணையர் அறிக்கை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியிடுகிறேன். 14.11.2016 தேதியிட்ட பட்டுக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.214/2014 ஆணையர் வரைபடம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12** ஆக குறியிடுகிறேன்.14.11.2016 தேதியிட்ட பட்டுக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.214/2014 நில அளவையர் புலப்படம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.13** ஆக குறியிடுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.